தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

*******

ஆணை எண் 048 /ந/2023
நாள் 02.05.2023

திரு. அஜித்குமார்,
குண்டூரணி கரை,
சிவகங்கை மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
சிவகங்கை நகராட்சி,
சிவகங்கை மாவட்டம். – எதிர் மனுதாரர்

சிவகங்கை மாவட்டம், குண்டூரணி கரை, காலேஜ் ரோடு கதவு எண். 14 என்ற முகவரியில் வசிக்கும் திரு. அஜித்குமார் என்பவரின் 28.02.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 01.03.2023 அன்று பெறப்பட்டு 048/ந/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சிவகங்கை மாவட்டம், குண்டூரணி கரை, காலேஜ் ரோடு கதவு எண். 14 என்ற முகவரியில் வசிக்கும் திரு. அஜித்குமார் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

"வார்டு எண்.25–ல் உள்ள குண்டூரணியை சீரமைக்க டெண்டர் விடப்பட்டு அதனை புனரமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேற்படி பணிக்கான டெண்டர் விடப்பட்டு பணிகள் நடைபெற்று வரும் வேளையில், மேற்படி குண்டூரணியில் உள்ள குப்பைகளை அள்ளாமல், முழுமையாக சீரமைக்காமல் அவசர கோலத்தில் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேற்படி பணியை செய்யும் ஒப்பந்ததாரரிடம் நேரடியாக பேசியும், சிவகங்கை நகராட்சி ஆணையாளர் உத்தரவின் பெயரில் இப்படி பணி செய்வதாக கூறினார். மேற்படி ஒப்பந்ததாரரின் பெயர், ஒப்பந்த விபரம் கேட்டபோது தரமுடியாது எனவும் கூறிவிட்டார். மேற்படி பணி சம்பந்தமாக சிவகங்கை நகராட்சி ஆணையாளரிடம் முறையிட்டும் எந்தவிதமான பலனும் இல்லை.

மேற்படி குண்டுரணி சீரமைப்பு பணிகளும் முறையாக குப்பைகளை அள்ளாமல் ஏனோதானோ வாக்கில் நடைபெறுகின்றன.

எனவே தாங்கள் தலையீட்டு மேற்படி பணி சம்பந்தமாக முறையாக குப்பைகளை அள்ளி, மேற்படி குப்பைகள் முறையாக அப்புறப்படுத்தியும், தரமான பொருட்கள் மூலம் சீரமைக்க உத்தரவிடுமாறு கேட்டுக்கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 06.03.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் சிவகங்கை நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

சிவகங்கை நகராட்சி ஆணையாளர் தனது 18.04.2023 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

"சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட குண்டுரணியில் சுமார் 20 வருடங்களாக நகராட்சி பகுதியில் சேகரமாகும் குப்பைகள் கொட்டப்பட்டு வந்தது. பின்பு 2019–2020 –ஆம் ஆண்டு சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அவர்கள் மேற்படி இடத்தினை பார்வையிட்டு குப்பைகளை இங்கு கொட்ட வேண்டாம் எனவும், குப்பைகளை முழுவதுமாக அகற்றுமாறும் அறிவுறுத்தப்பட்டது. அதன் பின்பு இக்குப்பைகள் அகற்றப்பட்டு சுந்தரநடப்பில் உள்ள குப்பை கிடங்கில் கொட்டப்பட்டது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண். 4(D) 18 நாள் 21.10.2022–ல் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2022 – 23–ன் கீழ் ரூ.35.00 இலட்சம் மதிப்பீட்டில் சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட வார்டு சி, பிளாக் எண்.16, சர்வே எண்.13–ல் உள்ள குண்டுரணி புனரமைக்கும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு 22.11.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இதில் மூன்று நபர்கள் கலந்து கொண்டு குறைவான விலை விகிதம் வழங்கிய திரு.நு.கந்தசாமி, சிவகங்கை என்பவருக்கு 06.12.2022 அன்று பணிஉத்திரவு வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. இதில் நடைபாதை, விளக்கு வசதிகள் செய்யும் பணி மற்றும் ஊரணியை சுற்றி கம்பி வேலி அமைக்கும் பணி மற்றும் மரக்கன்றுகள் நடும்பணி இம்மதிப்பீட்டில் உள்ளது.

இந்நிலையில் குண்டுரணியில் உள்ள மீதம் உள்ள குப்பைகள் முற்றிலும் JCB இயந்திரம் மூலம் அகற்றப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டது.

இந்நிலையில் திரு.செ.அஜித்குமார், த/பெ.செல்வராஜ், கதவு எண்.14, காலேஜ் ரோடு, குண்டுரணி கரை, சிவகங்கை என்பவரால் குண்டுரணி புனரமைக்கும் பணியினை மேற்கொள்வதற்கு முன்பாக அங்குள்ள குப்பைகளை அப்புறப்படுத்தாமல் பணி மேற்கொள்ளப்படுவதாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணி துவங்கப்படுவதற்கு முன்பாக JCB வாகனம் மூலம் ஊரணிக்குள் மற்றும் அதன் கரையின் மேல் இருந்த குப்பைகள் முற்றிலுமாக அகற்றப்பட்டது. பின்பு பணி மேற்கொள்ளப்பட்டது. ஊரணியில் இருந்த குப்பைகள் அகற்றப்பட்ட புகைப்படம், தற்போது ஊரணியில் நடைபாதை, மின்விளக்கு, கம்பிவேலி இருக்கைகள் அமைக்கும் பணிகள் முடிவுற்றது. மரக்கன்றுகள் அமைக்கும் பணிகள் முடிவுற்றபின் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வரும் என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(3) மனுதாரரும் மற்றும் சிவகங்கை நகராட்சி ஆணையரும் 19.04.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 11.04.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) மனுதாரர் திரு.செ.அஜித்குமார், 19.04.2023 அன்று நாகர்கோவில் முகாமில் நடைபெற்ற விசாரணைக்கு ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

"சிவகங்கை மாவட்டம், வார்டு எண்.25ல் உள்ள குண்டூரணியை சீரமைக்க டெண்டர் விடப்பட்டு அதனை புனரமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேற்கண்ட பணிகள் நடைபெற்றுவரும் வேளையில், மேற்படி குண்டூரணியில் உள்ள குப்பைகளை அள்ளாமலும், முழுமையாக சீரமைக்காமலும் அவசர கோலத்தில் பணிகள் நடைபெற்று வருகின்றன. குப்பைக் கூளங்களை சீரமைப்பது தொடர்பாக பொது மக்களுடன் மாவட்ட ஆட்சியரிடமும் முறையீடு செய்யப்பட்டது. மேலும் பேரூராட்சி தலைவரிடமும் முறையீடு செய்யப்பட்டது. ஆனால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

குண்டூரணியில் உள்ள குப்பைக் கூளங்களை அகற்றுவது தொடர்பாக தகவல் அறியும் உரிமை சட்டத்தின்படி என்னால் விவரங்கள் கோரப்பட்டதில், எனது கேள்வி எண் 4ற்கான பதிலாக " குண்டூரணிக் கரையைச் சுற்றி இருந்த குப்பைகள் அப்புறப்படுத்தப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது" என 24.03.2023 அன்று பதில் அளித்துள்ளனர். மேற்கண்ட பதில் தவறானதாகும் ஏனெனில் இன்றுவரை அங்கு குப்பைக் கூளங்கள் அகற்றப்படவில்லை என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனவே, குண்டூரணியை முழுமையாக சீரமைத்து, குண்டூரணிக்கரையில் உள்ள குப்பைக் கூளங்கள் முழுவதுமாக அகற்றிட ஆவன செய்யுமாறும் மேலும் பொது மக்களாகிய எங்களின் கோரிக்கைக்கு செவிசாய்க்காத அதிகாரிகளின் மீது முறையான நடவடிக்கை எடுத்திடவும் ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

இந்நேர்வு தொடர்பாக புகைப்படங்களின் நகல்களை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(5) எதிர்மனுதாரரான சிவகங்கை நகராட்சி ஆணையாளர், அவரது மகளின் உடல் நிலையை சரியில்லாத காரணத்தினால் 19.04.2023 அன்று நாகர்கோவில் முகாமில் நடைபெற்ற நேரடி விசாரணைக்கு ஆணையர் சார்பாக சிவகங்கை நகராட்சியில் பணிமேற்பார்வையாளராக பணிபுரியும் திரு.எஸ்.உலகநாதன் என்பவர் ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளனர்.

"சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட குண்டூரணியில் சுமார் 20 வருடங்களாக நகராட்சி பகுதியில் சேகரமாகும் குப்பைகள் கொட்டப்பட்டு வந்தது. பின்னர் மாவட்ட ஆட்சியரின் அறிவுறுத்தலின்பேரில் அங்குள்ள குப்பைகள் அகற்றப்பட்டு சுந்தரநடப்பு என்கின்ற இடத்தில் உள்ள குப்பை கிடங்கில் குப்பைகள் சேகரிக்கப்பட்டது.

கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2022-23ன் கீழ் ரூ.35.00 இலட்சம் மதிப்பீட்டில் சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட வார்டு.சி, பிளாக் எண்.16, சர்வே எண்.13ல் உள்ள மேற்கண்ட குண்டூரணி புனரமைக்கும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு 22.11.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு குறைந்த விலைப் புள்ளியை குறிப்பிட்டிருந்தவருக்கு 6.12.2022 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டு, அங்கு நடைபாதை, மின் விளக்கு வசதிகள் மற்றும் ஊரணியை சுற்றி கம்பி வேலி அமைக்கும் பணிகள் முடிவுற்றன. மரக்கன்றுகள் நடும் பணிகள்

நடைபெற்று வருகின்றன. பணிகள் முடிவுற்றவுடன் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு மேற்கண்ட இடம்விரைவில் வரவுள்ளது என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், மேற்கண்ட பணிகள் தொடங்குவதற்கு முன்பாக ஜே சி பி வாகனம் மூலம் ஊரணிக்குள்ளும் மற்றும் அதன் கரையிலுமிருந்த குப்பைகள் அகற்றப்பட்டுவிட்டன; ஆங்காங்கே தேங்கியுள்ளமீதமுள்ள குப்பைகள் விரைவில் அகற்றப்படும் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், சிவகங்கை நகராட்சி ஆணையாளர் அறிக்கை மற்றும் சிவகங்கை நகராட்சி பணிமேற்பார்வையாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

“2014 ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் (ம) விதிகளில் இம்முறைமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையிலும், குறிப்பாக:–

பிரிவு “12” The Ombudsman may consider and dispose of complaints other than those involving criminal offences, in the following manner namely:-

12 (1) (d) orders other necessary remedial measures considering the facts and circumstances of the case அடிப்படையிலும், இந்நிகழ்வில் பின்வருமாறு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

சிவகங்கை மாவட்டம், குண்டூரணிகரையைச் சேர்ந்த மனுதாரர் திரு.S.அஜித்குமார் என்பவர் தனது 28.02.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில் சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.25–ல் அமைந்துள்ள குண்டூரணியை ஒப்பந்தப்புள்ளி மூலம் முழுமையாக சீரமைக்காமல், குப்பைக் கூளங்களாக உள்ளது என புகாராக தெரிவித்துள்ளார்.

2022–23 ஆம் ஆண்டு கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சிவகங்கை மாவட்டம், சிவங்கை நகராட்சிக்குட்பட்ட வார்டு சி, பிளாக் எண்.16, சர்வே எண்.13–ல் அமைந்துள்ள குண்டூரணியை ரூ.35/– இலட்சம் மதிப்பீட்டில் புனரமைக்க அரசாணை (4D) எண்.18, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழுங்கல் துறை நாள் 21.10.2022–ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டதைத் தொடர்ந்து, நகராட்சியால் ஒப்பந்தப்புள்ளி மூலம் குறைந்த விலை நிர்ணயம் செய்த ஒப்பந்ததாரருக்கு 06.12.2022 அன்று பணி ஆணை வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

இதற்கிடையில் மனுதாரர், தனது 01.03.2023 நாளிட்ட தகவல் பெறும் உரிமைச்சட்ட மனுவில் ஊரணியைச் சுற்றியுள்ள குப்பைகள் அகற்றப்படாமல், சீரமைக்கும் பணி நடைபெற்று வருவது குறித்து தகவல் கோரியதில், சிவகங்கை நகராட்சியால் 24.03.2023 நாளிட்ட கடிதத்தில் குண்டூரணி கரையை சுற்றி இருந்த குப்பைகள் அப்புறப்படுத்தப்பட்டு, பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது என தகவல் பெறும் உரிமைச் சட்ட மனுவிற்கு பதிலினை மனுதாரருக்கு அளித்துள்ளனர்.

மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தின் 19.04.2023 அன்று நடைபெற்ற விசாரணையின்போது, குண்டூரணி கரையை சுற்றி இன்னும் குப்பைக் கூளங்கள் அகற்றப்படாமல் இருப்பதாகவும், குப்பைகளை அகற்றிவிட்டதாக தனக்கு தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் தவறான பதிலை அளித்துள்ளனர் என தெரிவித்து, குப்பைக் கூளங்கள் இருப்பதற்கு ஆதாரமாக சமர்ப்பித்த புகைப்படங்களில் எவ்வித தேதியும் குறிப்பிடப்படவில்லை.

ஆனால் சிவகங்கை நகராட்சி மேற்பார்வையாளரால் சமர்ப்பிக்கப்பட்ட GPS Map Camera வாயிலாக 10.04.2023 மற்றும் 17.04.2023–ல் எடுக்கப்பட்ட புகைப்படங்களின் மூலம் மனுதாரர் புகாராக தெரிவிப்பது போல் அல்லாமல் குண்டூரணி கரை சுற்றி குப்பைக் கூளங்களின்றி குண்டூரணி சீரமைக்கப்பட்டுள்ளதை அறிய முடிகிறது. இருப்பினும் ஆங்காங்கே குப்பைகள் உள்ளது தெரிய வருகிறது. இதனை உறுதி செய்யும் வகையில் அவை விரைவில் அகற்றப்படும் என நகராட்சி மேற்பார்வையாளர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

மேலும், மனுதாரர் தனது 01.03.2023 நாளிட்ட மனுவில் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் குப்பை கூளங்கள் அகற்றப்பட்டு உள்ளதா என்கிற தகவல் கோரியதற்கு சிவகங்கை நகராட்சியின் 24.03.2023 நாளிட்ட கடிதத்தில் குண்டூரணி கரையை சுற்றியிருந்த குப்பைகள் அப்புறப்படுத்தப்பட்டுள்ளன என தெரிவிப்பதற்கு எவ்வித ஆதார ஆவணமும் நகராட்சியால் சமர்ப்பிக்கப்படாததால், மனுதாரர் புகாராக தெரிவிப்பதுபோல் குப்பைகள் அகற்றப்படாமல், அதனை அகற்றியதாக தவறான தகவலை மனுதாரருக்கு நகராட்சியினர் அளித்துள்ளனர் என்கிற ஐயம் எழுகின்றது.

இந்நிலையில், குண்டூரணி கரையை சுற்றியுள்ள குப்பைகள் முழுவதுமாக அகற்றப்பட்டுள்ளனவா என்பதை மதுரை மண்டல நகராட்சி ஆணையாளர் நேரடியாக ஆய்வு செய்து அதன் அறிக்கையுடன் புகைப்படங்களையும் (Photos) 15 தினங்களுக்குள் இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பி வைக்குமாறு மதுரை மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. இதுபோன்ற புகார்கள் எதிர்காலத்தில் ஏற்படா வண்ணம் அனைத்து நகராட்சி / மாநகராட்சி ஆணையாளர்களுக்கும் உரிய அறிவுரைகள் வழங்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

The Commissioner, Sivagangai Municipality should ensure clearance of the accumulated garbage and litter as could be seen on the photos shown and submitted to this Forum. The goal should be clean and garbage-free water body and its environs. This Forum takes the aerial photos produced by the Municipality with a pinch of salt as it has been taken at a safe angle as if the area is totally free of garbage. The petitioner's photos are realistic, down to earth and reflection of the actual conditions prevailing in the area. The Sivagangai Municipality Commissioner is directed to organize a vigorous cleaning up programme in a thorough going scientific manner within 10 days and send a report with close up photos and mobile videoclip to this Forum. The petitioner's complaint about bad stink emanating from the garbage is genuine and real. Otherwise he need not spend his money and time by coming all the way to attend the hearing and depose with his complaint while the Municipality officials avail of Government conveyance and TA & DA for such trip. The Forum appreciates the social consciousness, ecological awareness and

environmental vibrancy of the petitioner who has brought this state of condition prevailing in the area after completion of improvement works to Gunduoorani at a cost of Rs.35/- lakhs without clearing the garbage accumulation in full to the notice of this Forum.

The DMA is urged to keep an eye on the follow up and compliance with the instructions of the Forum by the Sivagangai Municipality within the scheduled time.

If Garbage clearance is included in the Tender condition the Sivagangai Municipality should not release the entire fund to the contractor unless the work is executed satisfactorily.

2023 ஆம் ஆண்டு மே திங்கள் 02–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. S.அஜித்குமார்,
14, காலேஜ் ரோடு, குண்டுரணி கரை,
சிவகங்கை – 630 561,
சிவகங்கை மாவட்டம்.

2) ஆணையாளர், சிவகங்கை நகராட்சி,
சிவகங்கை – 630 561,
சிவகங்கை மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28. (பெயரிடப்பட்ட உறையில்)

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

உதவிப்பதிவாளர்